### தமிழ்நாட்டில் மக்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை தீட்டி

# எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வழிவகை செய்துள்ளார் முதல்வர்!

### திண்டுக்கல்லில் முடிவுற்ற திட்டப் பணி - திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல், ஜன.4

திண்டுக்கல் மாவட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, சாணார்பட்டி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.16.78 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தும், ரூ.20.93 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டு பணிகளுக்கு அடிக்கல்லும் நாட்டினார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கடந்த ஒரு வாரத்தில் ரூ.1678.84 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, ரூ.2093.24 இலட்சம் மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சிகளில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் தொடர்ந்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். மேலும் பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.18 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் தகுதியுள்ள நபர்கள் விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் இலவச பயணம் மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் பெண்களின் பயணச்செலவு குறைக்கப்பட்டு, வேலைக்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம் சுமார் ரூ.900 வரை சேமிப்பு ஏற்படுகிறது.

**குடிசைகளே இல்லா தமிழ்நாடு!**

தமிழ்நாட்டில் இன்னும் 10 ஆண்டுகளில் குடிசைகளே இல்லை என்ற நிலையை உருவாக்கும் வகையில் ஏழை, எளிய மக்களுக்கு வீடுகள் வழங்கும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 8.00 இலட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் நடப்பு ஆண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீடும் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன. மேலும், ஒரு பயனாளி வீடு கட்டுவது என்பது அவரது எதிர்காலத்திற்காக வாழ்நாளில் ஒருமுறை மேற்கொள்ளும் பணியாகும். இப்பயனாளிக்கு தகுதியிருப்பின் மகளிர் சுய உதவிக்குழு மூலம் ரூ.50,000 அல்லது கூட்டுறவு வங்கிகளில் குறைவான வட்டியில் ரூ.1.00 இலட்சம் வரை கடன் வழங்கப்படும். மேலும், வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களை குறைந்த விலையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்களின் சொந்த வீடு கனவு, "கலைஞரின் கனவு இல்லம்" திட்டம் மூலம் சாத்தியமாகியுள்ளது. "கலைஞரின் கனவு இல்லம்"திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 7,000 வீடுகள் கட்டப்படவுள்ளன. சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

அதேபோல் தமிழ்நாட்டில் ஏற்கனவே தொகுப்பு வீடுகள் திட்டத்தில் கட்டப்பட்ட 2.5 இலட்சம் பழைய வீடுகளை பழுது பார்த்து வழங்குவதற்காக ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



வீடுகள் கட்டுவதற்கு கட்டுமான பொருட்களை குறைந்த விலையில் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓட்டு வீடுகளை பழுது பார்க்க ரூ.50,000, கான்கிரீட் வீடுகளை பழுது பார்க்க ரூ.1.50 இலட்சம் வழக்கப்படுகிறது. சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 200 வீடுகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**புதிய நியாய விலைக்கடைகள்**

தமிழ்நாட்டில் குடும்ப அட்டை கோரி பெறப்படும் விண்ணப்பங்களில் தகுதியான நபர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் இதுவரை 17.00 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடந்த 44 மாதங்களில் 2,500 நியாயவிலைக் கடைகள் பிரிக்கப்பட்டு புதியதாக முழுநேரம் மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த புதிய கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் 230 முழுநேரம் மற்றும் பகுதிநேர நியாய விலைக்கடைகள் பிரிக்கப்பட்டு புதியதாக முழுநேரம் மற்றும் பகுதிநேர நியாயவிலைக்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

நியாயவிலைக் கடைகளில் கைரேகை பதிவு மூலம் பொருட்கள் விநியோகத்தில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் வகையில் கண்கருவிழி பதிவு முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகளில் தரமான அரிசி, பருப்பு, பாமாயில் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்படுகின்றன. கறுப்பு, பழுப்பு இல்லாத அரிசி வழங்க வேண்டும் என்பதற்காக 700 அரிசி அரவை ஆலைகளிலும் கலர்சாப்டர் இயந்திரம் பொருத்தப்பட்டு தரமான அரிசி உற்பத்தி செய்து வழங்கப்படுகிறது.

விவசாயம் மற்றும் விவசாயிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2 இலட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 20.70 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இந்த திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழ்நாட்டில்தான் செயல்படுத்தப்படுகிறது.

**புதுமைப்பெண் திட்டம்!**

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் 'புதுமைப்பெண்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி படிப்பது 34 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 5 இலட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் மாணவர்களும் பயன்பெறும் வகையில் அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி(தமிழ்வழி கல்வி) படித்த மாணவர்கள் உயர் கல்வி படித்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ.360 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் முதியோர் உதவித்தொகை ரூ.1000 என்பது ரூ.1,200ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை ரூ.1000என்பது ரூ.1,500ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது, மேலும், அதிகளவு பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை ரூ.1000 லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் ஆண்டுக்கு 10,000 கி.மீட்டர் நீளம் சாலைகளை மேம்படுத்தும் வகையில் ரூ.4,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 20,000 கி.மீட்டர் நீளம் சாலைகள் ரூ.8,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றிய சாலைகள் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

மக்களைத்தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றன. விபத்தில் சிக்கி காயமடைந்தவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான சிகிச்சைக்கு ஆகும் செலவை அரசே ஏற்கும் வகையில் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தில் ரூ.2.00 வரையிலான மருத்துவ செலவை அரசே ஏற்கும்.

பொதுமக்கள், விவசாயிகள், மாணவ, மாணவிகள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அவர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை பூர்த்தி செய்யும் வகையில் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் ஆதரவுடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.




நேற்று (03.01.2025) சென்னை கிண்டி சிட்கோவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ஆனந்த், முதன்மைச் செயலாளர் சிட்கோ மேலாண்மை இயக்குநர் ஆ. கார்த்திக், பொதுமேலாளர் தனலிங்கம், கண்காணிப்புப் பொறியாளர் (பொறுப்பு) சோமசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டியில் கழிவுநீர் தொட்டியில் விழுந்து

# உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன.4

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் உள்ள தனியார் பள்ளியின் கழிவுநீர்த் தொட்டியில் விழுந்து உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், விக்கிரவாண்டி மேற்கு கிராமத்தைச் சேர்ந்த குழந்தை லியா லக்ஷ்மி (வயது 5) த/பெ. பழனிவேல் விக்கிரவாண்டியில் உள்ள தனியார் பள்ளியில் பயின்றுவந்த நிலையில் இன்று (03.01.2025) பிற்பகல் பள்ளியிலிருந்த கழிவு நீர்த் தொட்டியில் எதிர்பாராதவிதமாக தவறி விழுந்து உயிரிழந்த துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த குழந்தை லியா லக்ஷ்மியின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### வி.எஸ்.நேதாஜி ஏற்பாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில்

# பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - முதியோர் இல்லங்களுக்கு நல உதவிகள்!

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினார்கள்!

திருவள்ளூர், ஜன 04-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் வர்த்தக அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரமும், கடம்பத்தூர் எறைமங்கலம் தகுதி உள்ள முதியோர் இல்லங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் நகரக் கழக செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மோ.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள் கே.ஏ. மதியழகன் கே.ஜி.ஆர். ராஜேஷ்குமார், ஜே.சி. பி.கேசவன், கார்த்திகேயன், கோபி, ஜி.கே.ஹரி, ஆர்.வாசு பி.ஆர். பிரபாகரன், டி.பால்ராஜ், ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.

இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து கடம்பத்தூர் ஒன்றியம் எறையமங்கலம் பகுதியில் உள்ள முதியோர் இல்லத்தில் முதியோர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் உணவு வழங்கினார்கள்

இதில் மாநில நிர்வாகிகள் ஆதிசேசன், குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் கே. திராவிட பக்தன், உதயமலர் பாண்டியன், ப.சிட்டிபாபு, ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் ராஜேந்திரன், சரஸ்வதி சந்திர சேகர், சி.சு.விஜயகுமார், எம்.பன்னீர் செல்வம், என்.நந்தகோபால், டி.மோதிலால், ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, ராஜேஷ்வரி கைலாசம், பரசுராமன், சம்பத் ராஜா, இ.குப்பன், டி.என்.ஆர்.சீனிவசன், கோபால், மாணிக்கம், ரவி, கீதா, கோதண்டம், ஏகாம்பரம், காஞ்சி படி சரவணன், கொப்பூர் திலீப், டாக்டர் முரளி, ராஜேந்திரன், ஆ.பவளவண்ணன், ஜி.பாண்டியன், வீனஸ், முனுசாமி, மனோகரன், பார்த்திபன் (எ) பாஸ்கர், சிவா, உ.சரத் பாபு, ஆர்.மனோஜ், சக்தி தாசன், ஜி.பி.பி.பிரவீன் சிலம்பு, உள்பட பலர் கலந்து கொண்டார்கள். முடிவில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் டி. சிவக்குமார் மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் ரகுநாதன் ஆகியோர் நன்றி கூறினார்கள்.

### தலைமை: தா.மோகன்குமார் எம்.சி.! முன்னிலை: இரா.துரைராஜ் எம்.சி. எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி.!

# 168 அ வட்டத்தில் பொங்கல் விழா கோலப்போட்டி! 3000 மகளிர்க்கு பரிசுகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஜன.4-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் முன்னெடுப்பில் 168அ வட்ட கழக செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான தா.மோகன்குமார் தலைமையில் சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13வது மண்டல வார்டு குழு தலைவருமான இரா. துரைராஜ் சைதை மேற்கு பகுதி செயலாளரும் 10 வது மண்டல வார்டு குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 168அ வட்டத்தில் வீடுகள் தோறும் உள்ள அனைத்து மகளிர்கள் பங்கு பெறும் மாபெரும் கோலப்போட்டி இன்று (04.01.2025 சனிக்கிழமை) காலை 06.00 மணி முதல் 07.00 மணிவரை நடைபெறுகிறது.

07.00 மணிக்கு மேல் மதிப்பீட்டு குழு வீடு வீடாக சென்று கோலங்களை மதிப்பீட்டு செய்து மதிப்பெண் வழங்கப்படுகிறது முதல் மதிப்பெண் பெற்று வெற்றி பெறும் மகளிருக்கு ரூபாய் 10 ஆயிரம் மதிப்புள்ள குளிர் சாதன பெட்டியும், இரண்டாம் பரிசாக ரூபாய் 7,500 மதிப்புள்ள சலவை இயந்திரமும், மூன்றாவது பரிசாக ரூபாய் 5,000 மதிப்புள்ள டில்டிங் வெட் கிரைண்டரும் மற்றும் கலந்து கொண்டு கோலமிட்ட அனைத்து மகளிர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கும் விழா 04.01.2025 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கிண்டி, லேபர் காலனி, லைன்ஸ் கிளப் பள்ளி அருகில் நடைபெறுகிறது.

விழாவில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு அனைவருக்கும் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கிறார்.

நிகழ்ச்சியில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு. ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள் நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், மாவட்ட பிரதிநிதிகள் ச. சேகர், டி.வி.நரசிம்மன், என்.நந்தகோபால், எஸ். ராதாகிருஷ்ணன், எஸ். ஜே.சலாம், ஜி.செல்வராஜ், க.உமாபதி, வே.முருகன், ஏ.மஜீத், இரா. சுதாபிரியன், கோட்டூர் ந. பாபு, கே.எம்.எஸ்.கணேசன், மு.மகேஷ்லாரன்ஸ், ஜி.யோவான், வே.ரமேஷ் குமார், சைதை ஆ.வரதன்,

வட்ட நிர்வாகிகள் ஈ. சீனிவாசன், த.பாண்டியன், மீனா பரமானந்தம், ஜி.என்.நாராயணன், கோ.தனசேகரன், என். மேக நாதன், டி.மனோகரன், ஜி.வெங்கடேசன், லிங்கேஸ்வரன், க.வேல்முருகன், பி.செல்வம், ஜா. அகஸ்டின், கொடி. பாலா, பார்சன் லோகு, எம்.எஸ். ஷேக்தாவுத், மே.குணா உள்ளிட்ட சைதை கிழக்கு பகுதியில் உள்ள மாவட்ட அளவிலான அணிகளின் நிர்வாகிகள் பகுதி அளவிலான அணிகளின் நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் அறிவுறுத்தல் படி வருகிற தமிழ் புத்தாண்டு பொங்கல் விழாவை முன்னிட்டு 04.01.2025 சனிக்கிழமை காலை சரியாக 06.00 மணிக்கு தொடங்கி 7.00 மணி வரை 168அ வட்டத்தில் உள்ள ரெட்டி தெரு 1 முதல் 3 வரையும் லேபர் காலனி 1 முதல் 11 தெருக்கள் வரையும் அருளாயம்மன் பேட்டை நாகி ரெட்டி தோட்டம் ஆலாட்சியம்மன் கோயில் தெரு நெருப்பு மேடு ஜோதித்தோட்டம் ஜோதியம்மாள் நகர் செட்டித் தோட்டம் வி.ஜி.பி.சாலை விநாயகபுரம் பார்சன் காம்ப்ளக்ஸ் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் வீடுகள் தோறும் போடப்பட்ட வண்ண கோலங்களை காலை 7.00 மணிக்கு மேல் மதிப்பீடு செய்து முதல் பரிசு இரண்டாம் பரிசு மூன்றாவது பரிசுக்குரிய கோலங்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும் சிறப்பு பரிசுக்குரிய அனைத்து கோலங்களையும் பட்டியல் இட வேண்டியதிருப்பதால் நமது 168 அ வட்டத்தில் உள்ள மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட கழக முன்னோடிகள், பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் சார்பு மன்ற நிர்வாகிகள், செயல் வீரர்கள், வீராங்கனைகள், அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என மாமன்ற உறுப்பினர் 168அ வட்ட கழக செயலாளர் தா. மோகன்குமார் எம்.சி. கேட்டுக் கொண்டுள்ளார்.



கழக தலைமை நிலைய முன்னாள் செயலாளர் மறைந்த கு.க.செல்வம் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அண்ணா பொதுநல மன்றத்தில் சிறுபான்மை அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் எஸ். கே.நசீர் ஏற்பாட்டில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ திருவுருவ படத்தை திறந்து வைத்து அறுசுவை உணவு வழங்கினார்.நிகழ்வில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., வீட்டு வசதி வாரிய தலைவரும் கழகத் தலைமை நிலைய செயலாளருமான பூச்சி முருகன், பகுதி செயலாளர் கே. ஏழுமலை, மாவட்ட துணை செயலாளர் கோடம்பாக்கம்.மு.சத்யா, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் பாஸ்கர், கார்த்திகா பாஸ்கர், வட்ட கழக செயலாளர்கள் எம்.எஸ் பழனி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, ஜி.பி செந்தில்குமார், துரை மோகன், பழக்கடை மூர்த்தி, ஜெ.சீனிவாசன், அண்ணா மன்ற நிர்வாகிகள் கண்ணதாசன், மணிமாறன், தில்லை பாஸ்கர், அசோக், ஜான் கென்னடி, ஜலந்தர், பா. சங்கர், ரவி உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.




தமிழர் திருநாள் மற்றும் தமிழ் புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி 110வது வார்டில் உள்ள பொதுமக்கள் 2000 நபர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு ஏற்பாட்டில் முதற்கட்டமாக புடவை, வேட்டி, சட்டை மற்றும் 2025ஆம் ஆண்டுக்கான நாள்காட்டிகள் பண்டிகை கால நலத்திட்டமாக வழங்கப்பட்டது. உடன் ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், வர்த்தகர் அணி மாநில துணை செயலாளர் ஐ.கென்னடி, மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, அகஸ்டின்பாபு, தலைமை செயற்குழு உறுப்பினர் வி.எஸ்.ராஜ், வட்டக் கழகச் செயலாளர்கள் குணசேகரன், தினேஷ் பிரபு, மாவட்ட அணைகளின் அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர்.விஜய், ச.அசோக்குமார், டி.எஸ்.ராஜா, மு.சீனிவாசன், திருமலை பொண்ணுரங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.